## 29.10 கிராம ஊராட்சி பணியாளர்களின் பணிப்பாதுகாப்பு குறித்த கோரிக்கை மீதான தெளிவுரைகள்

கடிதம் எண் 430006/இ5/2001 1. நாள் 20.11.2001.

அனுப்புநர்

திரு.என்.கோவிந்தன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர், ஊரக வளர்ச்சி துறை
சென்னை – 9.

பெறுநர்

அமைத்து மாவட்ட ஆட்சியர்கள்
ஊரக வளர்ச்சி இயக்குநர்,
பனகல் கட்டிடம், சென்னை–15.

அய்யா,

பொருள் பணியமைப்பு – கிராம ஊராட்சி நிர்வாகம் – ஊராட்சி

உதவியாளர்கள் / பகுதிநேர எழுத்தர்கள் உள்ளிட்ட இதர கிராம ஊராட்சிப் பணியாளர்கள் – பணிப்பாதுகாப்பு குறித்து கோரிக்கை –தெளிவுரை வழங்கப்படுகிறது.

பார்வை 1) அரசாணை எண் 225, ஊரக வளர்ச்சி துறை, நாள் 15. 10. 96
2) அரசாணை எண் 230, ஊரக வளர்ச்சி துறை, நாள் 15.10.96.
3) ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண் 90727/ஈ1/2001, நாள் 6.11.2001.

தமிழகத்தின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல்கள் முடிவுற்று புதிய பிரதிநிதிகள் பொறுப்பேற்றுள்ளதைத் தொடர்ந்து, கிராம ஊராட்சிகளில் தற்பொழுது பணியில் இருக்கும் ஊராட்சி உதவியாளர்கள், பகுதிநேர எழுத்தர்கள் முதலானோர் உள்ளிட்ட இதர பணியாளர்கள், புதிதாக பொறுப்பேற்றுள்ள கிராம ஊராட்சித் தலைவர்களால் தாங்கள் பணி நீக்கம் செய்யப்படக்கூடும் என்ற தவறான அச்ச உணர்வை தெரிவித்து தங்களுக்கு பணிப்பாதுகாப்பு வழங்கக் கோரும் கோரிக்கைகள் அரசுக்கு வரப் பெற்றுள்ளன. அரசு அக்கோரிக்கைகளை பரிசீலனை செய்தது.

2. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின் பிரிவு 46–ல் கிராம உராட்சி மன்றத் தலைவர்களுக்கு ஊராட்சி கூட்டங்கள் நடத்துவது, ஊராட்சி ஆவணங்களை பார்வையிடுவது முதலான அலுவல்களே வழங்கப்பட்டுள்ளன. ஊராட்சிமன்றப் பணியாளர்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் சட்டப்பிரிவு 84–ல் கிராம ஊராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கு (Executive Authority) வழங்கப்பட்டுள்ளது. சட்டப் பிரிவு 83–ன் கீழ் அரசு எந்த ஒருவரையும் கிராம ஊராட்சிகளின் செயல் அலுவலராக (Executive Authority) நியமனம் செய்யலாம். பார்வை 1–ல் காணும் அரசு ஆணையில், கிராம ஊராட்சிகளின் தலைவர்களை கிராம ஊராட்சிகளின் செயல் அலுவலர்காளக (Executive Authority) நியமனம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. எனவே கிராம ஊராட்சிமன்ற தலைவர்கள, செயல் அலுவலர்களாக அரசு நியமனம் செய்துள்ளதன் அடிப்படையிலேயே, கிராம ஊராட்சிமன்ற பணியாளர்களை கட்டுப்படுத்தும் (Control) அதிகாரத்தை பெறுகின்றனர், மேற்படி சூழ்நிலையில் கிராம ஊராட்சிகளின் தலைவர்கள் கிராம ஊராட்சிமன்றப் பணியாளர்களை தகுந்த காரணமின்றி எந்த வழிமுறையையும் பின்பற்றாது பணி நீக்கம் / பணி முறிவு செய்வர் என்பது தவறான கருத்தாகும். இதனை போக்கும் நோக்கத்துடன், கிராம ஊராட்சிமன்ற தலைவர்கள். கிராம ஊராட்சிகளின் செயல் அலுவலர்கள் என்ற அரசு நியமனத்தின் அடிப்படையில் பெறும் அதிகாரத்தின் அடிப்படையில் கிராம ஊராட்சி மன்றப் பணியாளர்களை பணி நீக்கம் / பணி முறிவு செய்வதற்கு மு ன்னர்,

(1) அதற்கான காரணத்தை எழுத்து மூலம் பதிவு செய்ய வேண்டும் மற்றும்

(2) பணியாளர்களை பணி முறிவு / பணிநீக்கம் செய்யும் முன் அவர்களுக்கு விளக்கம் அளிக்க தகுந்த வாய்ப்பு (reasonable opportunity to defend their case) வழங்க வேண்டும் என்றும். கிராம ஊராட்சிகளின் தலைவர்களுக்கு தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன.

3. மேற்படி தெளிவுரைகளை கிராம ஊராட்சிகளின் செயல் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள கிராம ஊராட்சிமன்ற தலைவர்களுக்கு சுற்றனுப்புமாறும் மேற்படி தெளிவுரைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்யுமாறும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அரசு செயலாளருக்காக